**நீதித்துறை நடுவர் எண் 3. நீதிமன்றம், தூத்துக்குடி.**

முன்னிலை – வே.சேரலாதன்,

நீதித்துறை நடுவர் எண்.3, தூத்துக்குடி.

2023 ம் ஆண்டு நவம்பர் மாதம் 2 ம் நாள், வியாழக்கிழமை

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.40/2023

CNR.No.TNTT02-014271-22

| **வரிசை எண்.** | **குற்றவியல் நடைமுறை விதிகள், 2019- விதி 106ன் கீழ் கோரப்பட்டுள்ள விவரங்கள்** | |
|---|---|---|
| 1. | காவல் நிலையம் மற்றும் குற்ற விவரம் | வடபாக கா.நி, தூத்துக்குடி<br>குற்ற எண். 641/2021<br>இதச பிரிவுகள் 294(b), 324, மற்றும் 506 பகுதி 2 |
| 2. | குற்றம் சாட்டப்பட்டவர்களின் விபரம் | |
| | 1.மோகனரத்தினம்(எ)மோகன்,<br>த/பெ.நாராயணன்,<br>2 வது தெரு, கிருஷ்ணராஜபுரம்,<br>தூத்துக்குடி. | 2.செல்வம் (எ) செல்வகுமார்,<br>த/பெ.சாலமோன்நாடார்,<br>9 வது தெரு, கிருஷ்ணராஜபுரம்,<br>தூத்துக்குடி. |
| 3 | குற்றம் நடந்த நாள் மற்றும் நேரம் | 25.10.2021, மாலை 6.00 மணி |
| 4. | புகார் மனு | 07.11.2021 |
| 5. | கைது | A2. 07.11.2021 |
| 6. | நீதிமன்ற காவல் | A2. 07.11.2021 |
| 7. | பிணை | A1.30.11.2021, A2.19.12.2021 |
| 8. | குற்ற இறுதி அறிக்கை | 30.08.2022 |
| 9. | விசாரணை தொடங்கிய நாள் | 11.10.2023 |
| 10. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 240 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 12.10.2023<br>இதச பிரிவுகள் 294(b), 324, 506 பகுதி 2 |
| 11. | எதிரியிடம் கு.வி.மு.ச பிரிவு 313 ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 19.10.2023 |

V CHERALADHAN
Digitally signed by V CHERALADHAN
Date: 2023.11.02 16:17:53 +0530

| | | |
|---|---|---|
| 12. | எதிரி தலைமறைவான நாள் | -- |
| 13. | சாட்சிகள் விசாரிக்கப்பட்ட நாள் | அ.சா.1 –19.10.2023<br>அ.சா.2 –19.10.2023 |
| 14. | மேலவை நீதிமன்றத்தால் வழங்கப்பட்டுள்ள தடை உத்தரவுகளின் விவரம் | இல்லை |
| 15. | இடைக்கால மனுக்களின் விவரம் | இல்லை |
| 16. | விசாரணை முடிவுற்ற நாள் | 30.10.2023 |
| 17. | உத்தரவு | 02.11.2023<br>எதிரிகள் இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படுகிறார்கள். |
| 18. | காலதாமதத்திற்கான காரணம் – கால தாமதம் எதுவும் ஏற்படவில்லை | |

இவ்வழக்கானது இன்று இந்நீதிமன்றத்தின் முன்னர் விசாரணைக்கு வந்தபோது இரு தரப்பிலும் முன் வைக்கப்பட்டுள்ள வாதுரைகள் கேட்கப்பட்டு பின்பு, வழக்காவணங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>தீர்ப்புரை</u>**

இவ்வழக்கானது இந்திய தண்டணைச் சட்டம்(இதச) பிரிவுகள் 294(b) 324 மற்றும் 506 பகுதி 2 கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

**<u>அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்</u>**

**1.** இந்த வழக்கின் எதிரிகள் இருவரும் உறவினர்கள் ஆவார்கள். புகார்தாரர் திரு.அருள்ராஜீக்கும், 1வது எதிரியின் குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை இருந்து வந்துள்ளது. இந்நிலையில் கடந்த 25.10.2021ம் தேதி மாலை 4 மணிக்கு புகார்தாரர் தூத்துக்குடி கிருஷ்ணராஜபுரம் 7வது தெருவில் நின்று

கொண்டிருக்கும்போது இந்த வழக்கின் எதிரிகள் இருவரும் புகார்தாரரை பார்த்து பொது இடத்தில் வைத்து ஆபாசமாக பேசி, 1 வது எதிரி கீழே கிடந்த கட்டையை வைத்து புகார்தாரரை வலது முட்டியில் அடித்து சிறுகாயமான சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், 2 வது எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து புகார்தாரரின் பின் பக்க தலையிலும், நடுப்பக்க தலையில் அடித்து சாதாரண காயமான சிறுகாயத்தை ஏற்படுத்தி, கொலை மிரட்டல் விடுத்த காரணத்திற்காக அரசுத்தரப்பில் எதிரிகள் மீது இந்த வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

**<u>அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-</u>**

**2**. இவ்வழக்கில் அரசுத் தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் புகார்தாரர் திரு.அருள்ராஜ் **அ.சா.1** ஆகவும், உதவி ஆய்வாளர் திரு.மாணிக்கராஜ் **அ.சா.2** ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். மேலும் இவ்வழக்கின் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1** ஆகவும், புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.2** ஆகவும், முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகவும், பார்வைமகஜர் **அ.சா.ஆ.4** ஆகவும், மாதிரிவரைபடம் **அ.சா.ஆ.5** ஆகவும், காயச்சான்று **அ.சா.ஆ.6** ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**<u>தீர்மானிக்கப்படவேண்டிய பொருண்மைகள்:-</u>**

**3.** எதிரிகள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506 பகுதி 2ன் கீழ் குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதனை அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? அவ்வாறெனில்

எதிரிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தண்டனை என்ன? என்பவையே இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மைகள் ஆகும்.

**விளக்கவுரை**

**4.** இந்த வழக்கின் உண்மைத் தன்மையை நிரூபணம் செய்யும் பொருட்டு அரசுத்தரப்பில் புகார்தாரர் திரு.அருள்ராஜ்/அ.சா.1 முதல் சாட்சியாக விசாரிக்கப்பட்டபோது, அவர் தனது முதல் விசாரணையில் கீழ் கண்டவாறு சாட்சியமளித்துள்ளார்.

> " .....ஆஜர் எதிரிகள் அதே பகுதியில் வசித்து வந்தார்கள். அதனால் அவர்களை எனக்கு தெரியும். நான் ஒரு வழக்கு விசாரணைக்காக காவல் நிலையம் சென்றிருந்தபோது வடபாக காவல்நிலைய காவல்துறையினர் ஒரு வெள்ளைதாளில் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். எதற்காக பெற்றார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.."

**5.** மேற்கண்ட சாட்சியத்தை பரிசீலனை செய்ததிலிருந்து எதிரிகளை புகார்தாரருக்கு தெரியும் என்பது புலப்படுகிறது. மேலும் புகார்தாரர் ஒரு வழக்கு விசாரணைக்காக காவல் நிலையம் சென்றிருந்தபோது காவல் துறையினர் புகார்தாரரிடமிருந்து ஒரு வெள்ளைத்தாளில் கையொப்பம் பெற்றுள்ளார்கள் என்பதும் தெரியவருகிறது. எனினும், இவ்வழக்கின் நிகழ்வு குறித்து அ.சா.1 ற்கு எதுவும் தெரியாது என்பதும் புலப்படுகிறது.

**6.** அரசுத் தரப்பிற்கு ஆதரவாக புகார்தாரர்/அ.சா.1 சாட்சியம் வழங்காததால், அரசுத்தரப்பில் அவரிடம் குறுக்கு விசாரணையில் முன் வைக்கக்கூடிய கேள்விகளை கேட்டபோது, அவர் தனது பதிலில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீது முன் வைத்துள்ள குற்ற நிகழ்வினை முழுவதும் மறுதலித்து சாட்சியமளித்துள்ளார் என்பது இந்நீதிமன்றத்திற்கு புலப்படுகிறது. எனவே,

அவரது சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிகள் புகார்தாரரை தாக்கி அவருக்கு கொலைமிரட்டல் விடுத்து உயிர்பயத்தை ஏற்படுத்தவோ இல்லை என்பது புலப்படுகிறது. மேலும் புகார்தாரர் எதிரிகளுக்கு எதிராக காவல்துறையில் எவ்வித புகார் வாக்குமூலமும் வழங்கவில்லை என்பதும் புலப்படுகிறது.

**7.** புகார்தாரர்/ அ.சா.1 அரசுத் தரப்பு வழக்கினை ஆதரித்து சாட்சியம் வழங்காத காரணத்தினால், இவ்வழக்கில் எதிரிகள் மீது முன் வைக்கப்பட்டுள்ள குற்ற நிகழ்வு தொடர்பாக இந்த நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது. அந்த சந்தேகத்தை கலையும் பொருட்டு உதவி ஆய்வாளர் திரு.மாணிக்கராஜ் அவர்களின் சாட்சியத்தை இந்த நீதிமன்றம் பரிசீலணை செய்கிறது. திரு.மாணிக்கராஜ் தனது சாட்சியத்தில் காவல் துறையினரால் புகார் வாக்குமூலம் பெறப்பட்டது தொடர்பாகவும், அதனைத் தொடர்ந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், அதனைத் தொடர்ந்து விசாரணை அதிகாரி இவ்வழக்கில் மேற்கொண்ட புலன் விசாரணை பற்றியும், இறுதியாக இவ்வழக்கில் தாக்கல் செய்த குற்ற இறுதி அறிக்கை தொடர்பாகவும் சாட்சியம் வழங்கியுள்ளார்.

**8.** அரசு தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள குற்ற நிகழ்வினை பறை சாற்றும் விதமாக அ.சா.2 சாட்சியம் அளித்துள்ளார். எனினும் அவரது சாட்சியமானது அரசு பணியின் காரணமாக வழங்கப்பட்ட சாட்சியாகவே கருதப்படும். மேலும் இவ்வழக்கில் பாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள அ.சா.1, தன்னுடைய சாட்சியத்தில் அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள குற்ற நிகழ்வினை முழுவதும் மறுதலித்து சாட்சியம் வழங்கியுள்ளதால், இவ்வழக்கில் புகார்தாரரால் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்படும் புகார் வாக்குமூலத்தின் மீது இந்த நீதிமன்றத்திற்கு சந்தேகம் எழுந்துள்ளது. எனவே, அந்த புகார்

வாக்குமூலத்தின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்டது தொடர்பாக அ.சா.2 வழங்கியுள்ள சாட்சியம் இந்த நீதிமன்றத்திற்கு அரசுத்தரப்பு வழக்கின் மீது நம்பிக்கையை ஏற்படுத்தபில்லை.

**<u>தீர்வு</u>**

**9.** எனவே அ.சா.2 ன் சாட்சியத்தை மட்டும் ஏற்றுக் கொண்டு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபணம் செய்யப்பட்டதாக கருத இயலாது என்று தீர்மானித்து, அவர்களுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டதாக அனுமானம் செய்வதற்கு போதிய சாட்சியங்கள் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. ஆகையால் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட இதச பிரிவுகள் 294(b). 324 மற்றும் 506 பகுதி 2 ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக கருதி எதிரிகளை மேற்சொன்ன குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்ய இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10.** முடிவாக இவ்வழக்கில் வழங்கப்பட்ட சாட்சியங்களிலிருந்து எழுந்துள்ள சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து, எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள, இதச பிரிவுகள் 294(b), 324 மற்றும் 506 பகுதி ன் கீழான குற்றச்சாட்டுகளுக்கு அவர் குற்றவாளிகள் அல்ல எனத் தீர்மானித்து அவர்களை கு.வி.மு.ச 248(1) பிரிவின் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**11**. இவ்வழக்கில் எதிரிகளால் இயற்றிக்கொடுக்கப்பட்ட பிணை முறி பத்திரம் இரத்தாக உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் அரசுத்தரரப்பில் பாதிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள அ.சா.1 தனது சாட்சியத்தில், இவ்வழக்கின் குற்ற நிகழ்வுகளை மறுத்து சாட்சியமளித்துள்ளதிலிருந்து,

அவர்திக்கப்படவில்லை என்பதும், அவருக்கு எதிராக எவ்வித குற்ற நிகழ்வும் நடைபெறவில்லை என்பதும் புலப்படுவதால், அவர்களுக்கு எவ்வித இழப்பீடும் வழங்கத்தேவையில்லை என்று இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் சரிபார்க்கப்பட்டு 2023ம் ஆண்டு நவம்பர் மாதம் 2ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V CHERALADHAN Digitally signed by V CHERALADHAN Date: 2023.11.02 16:18:03 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,

தூத்துக்குடி.

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 – | திரு.அருள்ராஜ் |
| அ.சா.2– | திரு.மாணிக்கராஜ் |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | 07.11.2021 | புகார் மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து | அ.சா.1 |
| 2 | அ.சா.ஆ.2 | 07.11.2021 | புகார் மனு | அ.சா.2 |
| 3 | அ.சா.ஆ.3 | 07.11.2021 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.2 |
| 4 | அ.சா.ஆ.4 | 07.11.2021 | பார்வைமகஜர் | அ.சா.2 |
| 5 | அ.சா.ஆ.5 | 07.11.2021 | மாதிரிவரைபடம் | அ.சா.2 |
| 6 | அ.சா.ஆ.6 | 07.11.2021 | காயச்சான்று | அ.சா.2 |

**எதிரி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் –**இல்லை

V CHERALADHAN Digitally signed by V CHERALADHAN Date: 2023.11.02 16:18:10 +0530

நீதித்துறை நடுவர் எண்.3,

தூத்துக்குடி.